# Murugupillai Navaratnasamy – the maestro swimmer
# By A.R.S. Mahalingam

Murugupillai Navaratnasamy a house hold name in every nook and corner of the country in the mid nineteen fiftees for his exceptionally extra ordinary attempt in successfully attempt in succfully swimming the thirty four mile stretch of the Palk Strait Channel from Vatvettiturai (V.V.T) to Point Calimerre, better known as Kodikarai in Southern India on the 25th of March 1954 was indeed forty four when he achieved this hard earned fame and glory!

The Golden Jubilee commemoration of this memorable event that placed this little island prominently in the world map then, is to celebrated now, in an elaborate scale at Thondaimanaru, the place of his birth, by the "Super Swimmer" Murugupillai Navaratnasamy memorial Golden Jubilee Society on the 25th of March 2014 to honour and to reminiscence the superhuman effort of this memorable character.

While being a student at Hartley College, Point Pedro the little Navaratnasamy learnt from one of his tutors with wide open eyes the astonishing feat of an Englishman successfully swimming the English Channel, hitherto unattempted, by swimming across a distance of 25 miles. The thought of swimming the neighbouring waters leading to India began germinating in his young mind on that very hour that began taking root as years passed by. From then onwards he took to the waters like a duck never failing even a day to practice swimming in all possible hard and strenuous ways thus conditioning his physique in challenging any eventualities.

Having joined the Government Service as an Agricultural Instructor, he made his mark as an energetic worker, tions that enticed many a damsel to fall for him. He entered his matrimonial life with Leelavathy, a a cute young thing from the village and led a contended wedded life, that was not to be for long. The couple were blessed with three sons but however the destiny of fate had the life of the young wife plucked midway leaving Navaratnasamy devastated and the dream of his life long ambition shattered beyond renascence.

It took him an unusually long time in coming to terms with death – that shattered his future and that of his three little ones, by which time he had aged beyond forty. His associates friends and many who were aware of his dreams rekindled his boyhood ambition by constant persuation and flattery which however when failed used the innocent influence of the three small kids as the last resort. The latter paid dividend in the form of Balachandran, the second son, who in later life when on sixteen created havoc by swimming from Kayts to Karainagar and back with having both his hands and legs tide up, making a new that he would fulfil his fathers ambition if the latter does not do so.

Navaratnasam's first attempt on the 16 th of March however had to be abandoned due to the rough sea that was accompanied by gale and storm though being only seven miles away from

his destination Point Climere. Undeterred he decided to have a second go nine days later. A mammoth crowd thronged the shores of Valvettiturai from where he took off on the 25th of March 1954 at 4.00 p.m in the presence of a distinguish gathering in the likes of C.Barr Kumarakulasingam Commissioner of Assize Jaffna. T.Ramalingam M.P Point Petro and the Prime Minister V.Nalliah M.P.

The strenuous exercises he has under gone, the sacrifices he had made in having his middle aged body trim and fit, the different strokes of the game he has learnt and mastered-all came into play in the challenge to cover a distance of 34, long miles in the rough sea that experiences a change of tide every six hours making swimming more and more difficult when the waters of Bay of Bengal enter the Indian Ocean and returns back. The shark infested sea with reptiles and sea snakes a plenty did pose problems and hindered his progress. Overcoming all these constrrraints the dare devil hero set foot and hoisted his flag at Point Calimere exactly at 7.00 p.m on the following day the 26th of March 1954.

It was a historic event indeed that brought praises and bouquest from all over the world for this little isle of ours and hero Navarattnasamy was received at this end by a crowd well over twenty five thoudand on the shores of V.V.T including many VIPs and politicians and the entire peninsula took a festive mood with crackers and fireworks being displayed all over.

The media – the press of both countries India and Ceylon gave very wide coverage and messages of congratulations were received from Pandit Jawaharlal Nehru, Prime Minister of India and his counter part here Sri John Kotalalela.

The super swimmer was honoured with a public reception in Jaffna by the City Mayor presenting him with a valuable golden memento. In Colombo a public reception was held in his honour with the premier Sir John Kottalawela presenting him with a Silver shield. In addition there were a host of congratulatory messages received from Foreign dignitaries taking pride of which was Her Majesty the Queen forwarding a medal to be worn in commemoration of Her Majestry's Coronation 2nd June 153.

The old boy on reaching sixty retired from the Govt. Service in 1965 and while in retirement was practicing to row around Sri Lanka in a Catamaran a distance of 760 miles which brought him his death on 30.06.1969. He is now survived by his eldest son N.Ramachandran who is in the managementgrade of Bank of Ceylon Jaffna.

May this dare devil Super Swimming M.Navaratnasamy's name be remembered for many more years to come.

நீச்சல்வீரன் நவரத்தினசாமி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்குநீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்து சாதனை படைத்த பெருமை யாழ்ப்பாணத்து முருகுப்பிள்ளை நவரத்தினசமியையே சாரும். யாழ். குடாநாட்டின் தென் பாகத்து தொண்டைமனாறு மண் தந்த இந் நீச்சல் வீரனின் சாதனையும் புகழும் உலகறியும். எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்ற சைவப்பெரியார் முருகுப்பிள்ளைதம்பதியருக்கு செல்வப் புதல்வனாய் 1909 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ஆம திகதி இப் பூமியில் ஜனனித்தார் இச் சாதனையாளன்.

**மாணவப் பருவம்**

சரும் சிறப்புமாய் வளர்ந்த இவர், ஆரம்பக்கல்வியைத் தொண்டைமனாறிலும், மேற்படிப்பைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் மேற்கொண்டார். “வாழும் பிள்ளையை மண்விளையாட்டிலும் விளையும் பயிரை முளையிலும் தெரியும் என்ற பழமொழிக்கு ஒப்ப கூரிய மதியும், வீரியதிறனும், நேரியசிந்தனையும் கொண்ட சீரிய மாணனாய் இவர் மாணவப் பருவத்திலேயே சிறந்து விளங்கினார்.

கல்வியில் ஆர்வம் மிகக் கொண்ட இவர் முன்னெவராலும் கடந்திராத ஆங்கிலக் காலவாயை வெள்ளைக்கார வீரன் ஒருவன் நீந்திக்கடந்து அதிசயச் செயலை ஆசான் வாயிலாகக் கேட்டறிந்ததிலிருந்தே, தானும் தம் பக்கத்திலிருக்கும் பாக்குநீரிணையை என்றொரு நாளாவது நீந்திக் கடந்து சாதனை படைக்க வேண்டும் என்ற வைராக்கியமும் ஆர்வமும் கொண்டார். அத்துடன், தீராத முயற்சிகளையும், நீச்சல் பயிற்சிகளையும் நாளாந்தம் இவர் தொடர்ச்சியாக மேற்கொண்டார்.

“தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்” என்னும் திருவள்ளுவர் வாக்கை தம் மனதில் பதிய வைத்து 44 வயது நிரம்பப் பெற்ற வராயிருந்தும், வீரமுறுக்கேறிய வாலிபனை போன்று காலையிலும், மாலையிலும் களைக்காது கடலிலே காலத்தைக் கடத்திப் பயிற்சி செய்தார்.

**முதலாவது முயற்சி**

தமிழ் ன்னையின் தவப் புதல்வன், ஈழநாட்டுச் சிங்கம் சாகரக்குமரன், நவயுக மாருதி நவரத்தினசாமி 31 ½ மையில் நீளமுள்ள பாக்கு நீரிணையை நீந்திக் கடப்பதற்காக 1954ஆம் ஆண்டு பங்குனி மாதம் 16ஆம் திகதி முதன் முறையாக ஆழியில் குதிக்கலாயினனார். இவ் வீர தீரச் செயலை, ஒப்பற்ற சாதனையைப் பார்ப்பதற்கும், வீர மகனை ஆசீர்வதித்து வழியனுப்புவதற்கும் நாற்திக்கில் இருந்தும் மக்கள் கும்பல் கும்பலாக வல்வெட்டித்துறை முகத்தில் வந்து குவியலானார்கள். தாயுள்ளம் படைத்த தமிழ் மக்கள் தங்களின் வீர மகன் வெற்றி விருதுடன் வீடு திரம்ப வேண்டுமென இறைவனைப் பிரார்த்தினர்.

இவ் வீரமகன் தமது 3 புத்திரர்களையும் மார்புறத் தழுவி முத்தமிட்டு பிரியாவிடை கூற மக்களும் முதியோரும் ஆசியியம்ப அன்றைய இலங்கைப் பிரதமரின் பிரதிநிதியாகச் சமூகம் கொடுத்திருந்த வி.நல்லையா எம்.பி. வழியனுப்பி வைக்க பிற்பகல் 2.30 மணிக்கு நவயுக மாருதி நவரட்ணசாமி தமது வீரப்பாதம் ஆழியில் தோய்த்து நீச்சலை ஆரம்பிக்கலானார்.

இயற்கையின் சீற்றம்

நீச்சலை ஆரம்பித்த நேரம் இருந்து எவ்வித சாகரத்தை ஊடறுத்து நவயுகமாருதி நீந்தினார் நீந்தினார், நீந்திக் கொண்டே போனார். னோல் குறிக்கப்பட்ட இலக்கை அதாவது

கோடிக் கரையை அடைவதற்கு இன்னும் 7 மைல் தூரமே இருந்த நிலையில் இயற்கை கொடுத்த பெரும் போரினாலும் எதிர்ப்பினாலும் நமது நீச்சல் நிபுணன் தமது நீச்சலை நிறுத்திக் கட்டுமரம் ஏறலானார்.

ஆயினும் ஆழியில் பாதம் இட்டு: நீச்சலை ஆரம்பித்த அன்று தொடக்கம் நீச்சலை கைவிட்ட நேரம் வரைக்கும் 23 ½ மணித்தியாலம் அலை கடலில் மிதந்து நீரோட்டம் அள்ளிக்கொண்டு போன தூரம் வரைக்கும் உண்மைக் கணக்கின் படி 35 மைல் வரை நீந்திக் கடந்துள்ளார். எனவே முதல் தடவையிலேயே முன் இருந்த உலக சாதனையை உடைத்தெறிந்த வீரென இவரைக் குறிப்பிடுதல் உண்மையிலேயே பொருத்தமானதாகும்.

**சாதனை**

பாக்குநீரிணையைக் கடந்தே தீருவேன் எனத் தான் கூறிய வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்றும் “ முன்வைத்த காலை பின் வைக்கமாட்டான் தமிழன் என்ற நற்பெயரை நிலைநாட்ட வேண்டும் என்றும் தனியான ஆசை கொண்டு 1954ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 4.10 மணிக்கு மீண்டும் கடலில் குதிக்கலானார்.

இலங்கை மாதா தன் மைந்தனின் நீச்சலை இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள். தமிழ்த்தாய் வெள்ளக் கமலத்தில் வீறிருந்து உள்ளம் மகிழ்ந்தாள். தங்கை மகனை வரவேற்க புன்னகை பூத்த முகத்துடனும் புது மலருடன் கோடிக்கரையை அண்டி வந்தாள்.

நீச்சலை ஆரம்பித்த நேரத்தில் இருந்து சொற்ப நேரமும் இளைப்பாறாது தொடர்ந்து நீந்திச் சென்று. தாய் நாடும் தமிழகமும், ஏன் ஆசியா கண்டமுமே ஆனந்தத்தால் கரைபுரண்டோட உலகமே கேட்டிராத ஒப்பற்ற சாதனையை வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ் மகன் முருகுப்பிள்ளை நரத்தினசாமி நிறைவேற்றி கொடிக் கரையேறி கொடியேற்றி வைத்தார்.

**வரவேற்பும், வாழ்த்தும்**

இவ் வீரசிகாமணி பாக்கு நீரிணையைத் தாண்டிக் கோடிக் கரையேறி வீரக்கொடி நாட்டிய செய்தி இலங்கை வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது. இலங்கை மற்றும் இந்திய மக்களும் குறிப்பாக யாழ்ப்பாண மக்களும் ஆழ்கடலின்றி ஆனந்தக் கடலில் நீந்தலானார்கள். இலங்கை - இந்தியப் பத்திரிகையில் யாவும் பெரிய எழுத்துக்களால் தலையங்கம் இட்டு இவ் வீரசிகாமணியின் வீரப் பிரதாபத்தை அகில உலகமும் விளங்க வைத்தன. இந்தியப் பிரதமர் பண்டித நேரு, இலங்கைப் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலை முதலான பிரமுகர்களிடம் இருந்து வாழ்த்தோலைகள் இவருக்கு கிடைக்கப்பெற்றன.

நம் வீரருக்கு வரவேற்பளிக்கும் முதலாவது பாக்கியம் இந்தியாவுக்கே கிடைத்தது. இவ் வரவேற்பில் பங்குபற்றிய பின்பு வாகை சூட்டிய நவரத்தினசாமி தம் தாயக மண்ணிற்கு வருகையில் இவ் வீரரை வரவேற்க வல்வெட்டித்துறைமுகத்தில் சுமார் 25 ஆயிரத்திற்கும் மேறபட்ட மக்கள் குழுமியிருந்ததுடன் பல பிரமுகவர்களால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார்.

அத்துடன் யாழ்ப்பாண நகரமேயரால் தங்கப்பதக்கம் மற்றும் சங்கிலியும் பிரதமர்ட கொத்தலாவையால் ஓர் வெள்ளிக்கேடயமும் இவருக்குப் பரிசளிக்கப்பட்டது. ஈற்றில் இவ் வீரனை இலங்கை அரசாங்கம், மாட்சிமை தங்கிய மகாராணியாருக்கும் கொமகனுக்கும் அறிமுகம் செய்து பெருமைப்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இத் திருமுகதரிசனம் தமிழ் வீரனுக்குக் கிடைத்தது. தமிழ் மக்களுக்கு ஓர் பெரும் பாக்கியமும் கௌரவமும் ஆகும்.

1955ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி சாதனை ஒன்றைப்படைக்கும் நோக்குடன் யாழ் தொண்டமனாறைச்சேர்ந்த தமிழ் மகன் ஒருவ்ன பாக்குநீரிணையை குதித்தார். அவர்தான் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி. வல்வெட்டித்துறை துறைமுகத்தில் இருந்து கோடிக்கரை வரையான 31 ½ மைல் தூரத்தை இடைவிடாது நீந்திக் கடக்கும் நோக்கத்துடன் இவர் தனது சாதனைப் பயணத்தை அன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பித்தார்.

இவரை வழியனுப்ப வந்த பெருமளவான மக்களிடமும் தனது மூன்று பிள்ளைகளிடம் விடைபெற்று தனது சாதனையை நிலைநாட்டப் புறப்பட்ட அவ்வீரர் கடலில் சிறிது தூரம் சென்றதும் மக்களிடம் கைகாட்டி விடைபெற்றார். வைத்திய அதிகாரிகள் மற்றும் சில அதிகாரிகளும் படகுகளிலும் கட்டுமரத்திலும் பின்தொடர சமுத்திரத்தைக் கிழித்துக்கொண்டு நீந்திக்கொண்டு கோடிக்கரை நோக்கிச்சென்று கொண்டிருந்தார். எவ்வித களைப்புமின்றி நீந்திக் கொண்டிருந்த அவருக்கு கொடிக்கரையை அடைய ஏழுமைல்கள் மட்டுமே இருந்த வேளையில் இயற்கையின் சோதனை ஏற்பட்டது.

கடும்மழையினால் எழுந்த பேரலை அவருக்கு பெரும்தடையாக அமைந்தது. மோட்டார் படகுகளும், கட்டுமரங்களும் தாக்குப்பிடிக்காது பின்வாங்கத் தொடங்கின எனினும் இந்நிலையில் எவ்வாறாயினும் சாதனை புரிந்தே தீருவென் என்ற திடசங்கற்பத்துடன் நீந்திய அவரை கடலில் ஏற்பட்ட கடுமையான நீரோட்டம் பின்நோக்கித்தள்ளியது அவர் நீந்தி முன்னேறிச்சென்ற தூரத்தைக்கூட தாண்டிபின்னோக்கிவர வேண்டியதாயிற்று இதனால் அவர் தனது 23 ½ மணிநேர முயற்சியைக் கைவிட்டு கட்டுமரத்தில் ஏறவேண்டிய நிலை ஏற்பட்டது. அனால் அவர் நீந்திச் சாதனை செய்ய நினைத்த தூரத்திலும் பார்க்கக்கூடுதலாக 35 மைல் தூரத்தை நீந்திக்கடந்திருந்தார்.

ஆனால் “பாக்கு நீரிணையை நீந்திக்கடந்தே தீருவேன் அன்றேல் என்பிள்ளைகளில் ஒருவன் நிச்சயம் கடப்பான்” என இந்த முயற்சியின் பின் நவரத்தினசாமி அவர்கள் உறுதிபடக்கூறினார்.

அவர் கூறியது போவே ஒரு வாரத்தின் பின்னர் அதாவது 25ஆம் திகதி பிற்பகல் 4.10 மணிக்கு மீண்டும் தனது சாதனை முயற்சியை ஆரம்பித்தார். இச்சாதனை வீரரை வழியனுப்பிவைக்க வாழ்த்தவென முன்னரிலும் பார்க்க கூடுதலான மக்கள் கரையிலும் திரண்டனர். இவர்களின் வாழ்த்துகளுடன் தனது இரண்டாவது முயற்சியை ஆரம்பித்த சாதனை வீரர் இடைவிடாது பாக்கு நீரிணையை ஊடறுத்து நீந்தி 26ஆம் திகதி இரவு ஏழுமணிக்கு கோடிக்கரையில் கொடியேற்றி தனது சாதனையை நிலைநாட்டினார். இந்த வீரர் இச்சாதனையைப் புரிந்தபோது அவசரது வயது 45 என்பது இங்கு குறிப்பிடத்தகது.

1909ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ஆம் திகதி பிறந்த அவருக்கு இவ்வாறு ஒரு சாதனையைப் புரிய வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கியது ஆங்கிலக் கால்வாயை நீந்திக்கடந்த ஒரு வெள்ளையரின் சாதனையாகும். இவர் கல்விகற்கும் காலத்தில் ஆசிரியர் ஒருவர் இச்சாதனை குறித்து எடுத்துக் கூறியபோது தான் எவ்வாறாயாயினும் பாக்கு நீரிணையை நீந்திக்கடக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்து அதற்காக விடாப்பிடியாக முயறசிகளை எடுத்தார்.

தனது கல்வியின் பின் விவசாய திணைக்களத்தில் சேர்ந்து கட்மையாற்றிய அவர் அங்கும் தனது நுண்மதியினால் விதைதூவும் இயந்திரம் போன்றவற்றை வடிவமைத்து அதற்கான அங்கீகாரம் பெற்றார்.

குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்த நிலையிலும் தனது குறிக்கோளை எவ்வாறாயினும் நிறைவேற்றியே தீருவதென இடைவிடாது முயற்சியை மேற்கொண்டு வந்தார்.

தனது சாதனையை நிலைநாட்டுவதற்காக 18வருடகாலம் அவர் பயிற்சிகளை மேற்கொண்டார். தனது வீட்டிலிருந்து கிளிநொச்சி வரையான என்பத மைல்கள் தூரத்தை ஈருருளி மூலம் கடந்து சென்றும் மணற்குவியல்கள் உள்ள இடங்களில் 10மைல் தூரத்தை நடந்தும் தனது உடலை உறுதிப்படுத்திக் கொண்டார். கடலில் பல மைல்கள் தினமும் நீந்திப்பயிற்சி எடுத்தார். இரவும் பலும் நீந்தவேண்டியேற்படும் என்பதால் கடலில் அசைவின்றி படுக்கும் பயிற்சியை பலமணி நேரங்கள் எடுத்தார்.

இவ்வாறு ஓய்வு ஒழிச்சலின்றி அவர் எடுத்த பயிற்சியும் விடாமுயற்சியும் அவரைச் சாதனை மனிதனாக்கியது. இவரது சாதனை குறித்த செய்திகிடைத்ததும் தமிழ் மக்கள் பெரும் மகிழச்சியடைந்தனன். இதனை பெருவிழாவாகவே அவர்கள் நடத்தினர்.

அவ்வேளையில் அவருக்கு வரவேற்பளிக்கவென வல்வெட்டித்துறை துறைமுகத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்றனர்.

அவ்வேளையில் அரசாங்கமும் அவருக்கு பலபாராட்டுகளையும் பரிசில்களையும் வழங்கியதுடன் பிரிட்டிஸ் மகாராணிக்கும் கோமனுக்கும் அறிமுகம் செய்துவைத்துக் கௌரவித்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர் 50 ஆண்டுகளுக்கு முன் புரிந்த சாதனையை அவர் மறைந்து 35 வருடங்கனுக்கும் மேலான போதும் கூட கௌரவிக்க இன்னமும் அவரது மக்கள் விழா எடுப்பது அவருக்கு கிடைக்கும் மிகப்பெரிய கௌரவமாகும்.

## வீரம் விளைந்த விறல் மன்னன்

## வல்வை தந்த நவரத்தினசாமி

புகழொடு தோன்றிய மண்ணின் மைந்தர்களை சாதனை படைத்த வீரர்களை இந்த மண் மறக்கமாட்டாது, மறக்கவும் கூடாது.

நுரைத்தடிக்கும் நீலத்திரைக்கடல் தழுவிய மண் வல்வெட்டித்தறை நெய்தல் நிலம் நெஞ்சம் தழுவிய அன்புக்கும், ஆற்றலுக்கும் ஏற்ற மண் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரங்களும் இதற்கு சான்று பகரும்.

வல்லார்கள் நல்லார்கள் வாழும் நன் நாம வல்வெட்டித்துறையில் வல்லாளன் நவரத்தினசாமி 1909ம் ஆண்டு ஆவணி திங்கள் 16ம் நாள் ஜனனமானார். சொல் நாம வல்வெட்டி என்னம் பெயரை சொல் வெற்றித்துறையென்று கொண்டால் என்ன என பண்டிதர் ஆசிநாதன் வினாவெழுப்பியதுண்டு. அந்த மண்ணிலே ஆழி தழுவிய அற்புதத் திருமண்ணில் வல்லாளன் முதற் குதித்து நீந்திச் சென்று வளமான வெற்றியையும் ஈட்டித் தந்தான்.

நவம் என்றால் புதுமை என்று பொருள். வெற்றித் திருமண்ணில் உதித்த புதுமை பொலி இரத்தினம் நாட்டில் வியத்தகு சொத்தானான். வெள்ளை மணற் பரப்பில் விளையாடிய வித்தகன் கொள்ளை உள்ளத்தோடு நீலக் கடலலைகளை நாளும் பார்த்திருக்கிறான். பரதகண்டத்தையும் இலங்கை மாதாவையும் பிரிக்கும் பாக்கு நீரிணையை பலமுறை பார்த்திருக்கிறான். நிலத்திலே விளையாடுவது போல் நீலக்கடலிலே கடலலைகளுடன் விளையாடிப் பயிற்சி பெற்றிருக்கிறான். நீண்ட நெடுநாளைய இலட்சியத்தை நிறைவேற்ற 1954ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25ம் திகதி பிற்பகல் 4மணிக்கு வல்வையம்பதிக் கடலிலே இறங்கினான். அடுத்தநாள் 26ம் திகதி பிற்பகல் 7மணிக்கு கோடிக்கரையை அடைந்து உலக சாதனையை நிலைநாட்டினான்.

மலைபோன்ற அலைமோதும் மகாசமுத்திரத்தை மனோதைரியத்துடன் பிளந்து சென்று கரையேறிய இம்மானிடப் பிறவியைப் பற்றி எம் மனத்திலெழும் மகிழ்ச்சிக்கு கங்கு கரையில்லை. திமிங்கிலங்கள், முதலைகள், வேளாச்சுறாக்கள், திருக்கைகள் போன்ற தீங்கிழைக்கக் கூடிய பல ஜெந்துக்களை மனோதிடத்துடன் வெற்றி கொண்டு, சுழி நீரோட்டம் என்பவற்றின் அபாயங்களுக்கு உபாயங்களைக் கண்டு இலட்சியத்தைப் பூர்த்தி செய்த மறத்தமிழன். தமிழர்கள் செஞ்சங்களில் எல்லாம் காலத்தை வென்று நிறைந்து நிற்க வேண்டியவன், நிறைந்து நிற்பான்.

சகிப்புத்தன்மை, திடசங்கற்பம் என்பன தனது இரு கண்களாகக் கொண்டவர் நவரத்தினசாமி. அரும்பெரும் விஞ்ஞானிகள், இமயம் தொட்ட தென்சிங், பாக்கு நீரிணை தாண்டிய நவரத்தினசாமி ஆகியோர் எதனையும் சாதிக்கலாம். முடியாது என்பது கிடையாது என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டனர்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் பெருமை கொள்ளத்தக்க நற்றவப் புதல்வன் நவம். ஈழநாட்டு மக்களுக்கும் வல்வெட்டித்துறையை வெல்வெற்றித்துறையாக்கிய பெருமைக்கும் மூலமூர்த்தியாய் திகழ்ந்தவர் நவரத்தினசாமி.

அரிது அரிது மானிடராதல் அரிது என்ற ஔவையின் பொன்மொழிக்கு ஈடுகொடுத்து ஞானமும் கல்வியும் நயத்தந்து சாதனை வீரனாக நிமிர்ந்து நின்றமை நீண்ட பயிற்சியின் முதிர்வென்பதை முழு உலகமும் அறியும்.

‘‘ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி தாழாது உஞற்றுபவர்’’

என்ற வள்ளுவன் வாக்கிற்கு எடுகோளாக இலங்கிய இலங்கைத் தமிழனை - ஈழத்திருமகனை வல்வையின் எல்லையில்லா ஆற்றலனை முழு உலகமுமே போற்றியது. சாதனைக்கு எல்லையில்லை என்பதால் இலங்கையைச் சுற்றிவர கட்டுமரத்தில் பயிற்சி பெற விரும்பினார். தொண்டமானாற்றுக் கடலில் 760 மைல் சுற்றிவரப் பயிற்சியில் ஈடுபட்டார். தாளாத முயற்சியும், கலையாத துணிவும் கொண்ட நவரத்தினசாமி காலத்தின் கட்டளையால் புகழ் தந்த திரைக்கடலில் மூழ்கி மரணிக்கலானார்.

கோடி கல்லாலே எறிதலைப்போல் அலைகள் பாய கையாலும் காலாலும் அவற்றைத் தாக்கி நல்லாண்மை நெஞ்சினொடு பாக்கு நீரிணையை கடந்த செம்மலின் நிறைவுநாள் குறிக்கோள் குறிதவறியது மனதிற்கு வேதனைதான். சலப்பிரியனான நவரத்தினசாமி தான் கடலின் அரசனெனக் கண்ட தமிழுலகம் போற்றி நாற்றிசையும் புகழ் மணக்க ஏற்றி வைத்தது. வேதாணிரணியத்தில் வரவேற்பு விழா, வாழ்த்தொலி ஈழநாட்டில் வெற்றி விழாக்கள் இவை அன்றைய நிகழ்வுகள். 5000 ஆண்டுகளுக்கு முன் வங்கம் கடந்து வளமார் கடல் தாண்டி எங்கும் வணிகம் புரிந்து பொருளீட்டிய தமிழன் நவரத்தினசாமி தமிழ் மண்ணின் தவப்புதல்வன். மறைவாக நமக்குள்ளே பழங்கதை பேசும் பழக்கத்தை ஒழித்து பிறநாட்டார் நம் வீரத்தை போற்ற வேண்டும், தியாகச் செயலை திறனாய்வு செய்ய வேண்டும் என்னும் எண்ணத்தை உள்ளங்களில் உதிக்க வைத்த உத்தமன் எங்கள் நாட்டின் முத்து, அன்றியும் புகழ் நாட்டிய சொத்து எனலாம்.

அலைகடலில் வீரம் விளைத்த வித்தகன். கணிதம், தொழில்நுட்பம் என்பவற்றிலும் வித்தகனாக விளங்கினார். ஆக்கத்திறன் மிக்க அறிவாற்றல் பெற்றிருந்தார். அதனைச் செயலிலும் காட்டினார். கலையார்வம் மிக்க கண்ணியவான். 1950ல் வானொலி மூலம் கணித விவேகம் மக்கள் முன் கொண்டுவரப்பட்டது.

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை என்றும், மேழிபிடிக்கும் கை வேல்வேந்தர் நோக்கம் கை என்றம் போற்றுவர். அந்த வகைக்க விவசாய திணைக்களத்தில் தனத 19 வயதில் வேலைக்க அமர்ந்து வியத்தக சாதனைகள் படைத்தார். தொழில்நுட்பத் திறனால் நவீன இயந்திரங்கள் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்தவரின் எச்சங்கள் பற்றி இவ்விடத்தில் சிந்தித்தல் சாலப் பொருந்தும் ஏனெனில் “தக்கார் தகவிலார் என்பது வரவர் எச்சத்தால் காணப்படும்” என்பது வள்ளுவன் வாய்மொழியாகும். முத்தென முகிழ்ந்த மூன்று புதல்வர்களில் ஒருவரான பாலச்சந்திரன் கைகளையும், கால்களையும் கட்டிய வண்ணம் 21.07.1963ம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு ஆழமான 1500 அடி அகலமான ஊர்காவற்றுறைத் துறைமுகத்திற்கும் காரைநகர் துறைமுகத்திற்கும் இடையிலுள்ள கடல் நீரோட்டத்தைக் குறுக்கறுத்து நீந்திக் கடந்து சாதனை நிலை நாட்டினார்.

ஒரு சந்தர்ப்பத்தில் தந்தை பாக்கு நீரிணையைக் கடக்க தவறினால் தானே முயன்று அச்சாதனையை நிலைநாட்டுவேன் என்று பிரதிக்ஞை செய்தார்.

‘‘மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்’’ என்பது வள்ளுவமாயிற்றே.

துணிச்சல் மிக்க சிறுவனுக்கு சாதனை நிலைநாட்டும் போது வயது பதினாறே. வையகம் வியக்க இல்லறம் புகுந்து நன்மகட்பேறு பெற்று வாழ்ந்த வரலாறுண்டு.

வரலாறு படைத்த மாமனிதனுக்கு உயர்ஸ்தானிகர் தேசாய், தேசாதிபதி மாளிகை வாழ்த்துக்கள் வழங்கியது. முருகுப்பிள்ளை முகிழ்ந்த முத்தான புதல்வனுக்கு வெற்றிச் சின்னம் மகாராணியால் அளித்துக் கௌரவிக்கப்பட்டது. புகழ் இலங்கை மண்ணில் அடங்கிவிடவில்லை. பாரெல்லாம் பரவி வல்வெட்டியை வல்வெற்றித்துறையாக்கி இலங்கை மாதாவிற்கு முடி சூட்டியது. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ நவரத்தினசாமியால் பெரும் புகழ் பெற்றது.

இந்த உயரிய சாதனையை சாதனை வீரனை நினைக்கும் போது நமது நெஞ்சங்கள் நிமிருகின்றன. மகிழ்வால் விம்முகின்றன. அந்த மண்ணில் வீரம் விழைவிக்க எண்ணிய தமிழர்கள் தலைவன் தோன்றினானென்றால் இன்னும் இரட்டிப்பு மகிழ்வே.

நிறைவாக எங்கள் ஆழிக்குமரனக்கு இட்ட மலர்மாலைகளோடு கொடுத்த விருதுகளோடு வாடாத மாலை ஒன்றைச் சூட்டி நிறைவு செய்யலாம்.

வெற்றி ஈட்டிவிட்டான் - தமிழன்

விருது நாட்டிவிட்டான் - உலகு

முற்றும் கேட்டிராத – புகழின்

முடியிலேறிவிட்டான் - அன்பாய்ப்

பெற்ற தாயின் புகழை – எங்கும்

பேச வைத்துவிட்டான் - ஈழம்

நற்றவத்தினாலெ - ஈன்ற

நவரத்தினசாமி.

கடல் கடந்த தமிழன் ∴ ஆழியை அள்நத தமிழன்

வாழ்க்ககை ஒரு போராட்டம்.
வாழ்க்ககை ஒரு சங்கீதம்
வாழ்க்ககை ஒரு புதிர்.
வாழ்க்ககை ஒரு பந்தயம்
வாழ்க்ககை ஒரு பல்கலைக்கழகம்
வாழ்க்ககை ஒரு முன்னும் பின்னும் கிழிந்த புத்தகம்.

வாழ்வதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்கள்
போராடி வெற்றி பெற்றவர் பதித்த முத்திரைகளும்
வாழ்வை இரசனையோடு இசைத்து மீட்டிப் பார்த்தவர் கதைகளும்
வாழ்வில் தாங்கள் கற்றதை மற்றவர்களுக்கு
விட்டு வைத்த களஞ்சியங்களும்
எதற்குமே சளைக்காமல் எதிர் நீச்சல் போட்டவர் சவால்களும்
கல்லறைக்குள் தூங்குகின்ற காதல் ஓவியங்களும்
காணும் உலகில் ஏராளம்

ஒன்றுமே தெரியல்ல உலகத்திலே
என்னைப் போல் ஏமாந்தவர்
யாருமல்ல உலகத்திலே
எனப் புலம்புபவர்களும் ஏராளம்..

ஏல்லாமே இறைவன் கணக்கில் நாடகம் தான் ஆயினும் நன்றாக நடித்தவர் திறமையை மற்றவர் படித்தார்கள். நானிலம் எங்கும் அவர் புகழ் பாடினார்.
வந்தால் அழியாதது புகழ் உன்றே என்றனர்.
அதனால்தான் அதன் உச்சியைத் தொட்டவர்
உலகம் உள்ள வரை வாழ்கிறார்கள்.

புகழை அடைய ஏதோ ஒன்று தெரிவாக வேண்டும்.
தெரிவு வேறு படலாம்.
அதற்காக போராடும் வடிவங்களும் வேறுபடலாம்.
ஆயினும் மனித மனம் அடையும் நிறைவு ஒன்றேதான்
அந்த நிறைவை அடைந்தவர் வாழ்வு
அதற்காக அவர்கள் கண்ட கனவுகள்.
அவை வரலாற்றுப் பதிவாகிவிடுகின்றன.

வரலாற்றுப் பதிவேடுகளை சுமந்து நிற்கும் இந்த உலகம்
தந்தவைகளும் ஏராளம்

திருக்குறளுக்கு ஒரு வள்ளுவனும்.
ஆத்திசூடிக்கொரு ஔவையும்.

மணிமேகலை குண்டலகேசி யென நீண்டிடும் நூல்வழி வாழ்ந்தவர்
வையத்தில் இடம் பிடித்திடினும் வள்ளுவன் புகழையோ
தெள்ளும் தமிழ் பாரதி புகழையோ இனி எவர் ஒரு பிறவி எடுத்திடினும்
அவர் புகழதான் மறையுமோ. இல்லையோ

இதனால் தான் புகழ் அழியாதது
அது வந்த வழி வேறாகலாம்.
வீரமாகட்டும். இல்லை விவேகமாகட்டும்
விட்டில் பூச்சிவ ாழ்வாகத்தான் ஆகட்டுமே
புகழ் வந்தால் வந்ததுதான். கீதையைத் தந்த கிருஷ்ணனும்
யுகம் பல கடந்தும் இன்றும் வாழ்கின்றான்.
அவதார புஷர் என்பதற்காக அல்ல.
கிருஷ்ணாவை ஏற்றுக் கொள்ள மறுத்து காந்திஜியும்
அகிம்சையை முதன் முதலில் தெரிவு செய்த காரணத்தால்
இன்றும் வாழ்கிறார்.

அந்த வரிசையில் தான் தனி மனித தெரிவு இனம் மொழி மதம்
என்பவற்றுக்கு அப்பால் பட்டதாக அமைந்தால் அது நிச்சயம்
புகழின் உச்சிக்கே அழைத்துச் செல்லும்.

திரை கடல் ஓடித் திரவியம் தேடு என்றாள் ஔவை.
ஔவை மொழி வெறும் கவ்வை மொழியல்ல.
கருத்து மொழி, காதல் - வீரம் - கல்வி எதுவாயினும் செல்வம்
வேண்டுமென்றாள்.
அத்தனையும் உதறித்தள்ளி சாதாரண வாழ்வில் சரித்திரம் படைத்தவர்
கதைதான் இது.

குளிர் காலத்தில் ஸைபீரியாவில் வாழும் பறவைக் கூட்டம் தன் சிறகினை
நம்பி கடல் பல தாண்டி வந்ததை நாம் கண்டதுண்டு. அது
வாழ்வுக்காக. ஒன்றுக்கொன்று துணையாக.
ஆனால் தரணியில் தனி ஒருவன் தன் கைகளை மட்டும் தண்ணீரில்
கிழித்து சாகரம் கடந்து இற்றைக்கு ஐந்து தசாப்தங்களுக்கு முன்
கதையொன்று படைத்தானே அந்த சாதனையின் வெற்றி வரலாறுதான் இது.

புதிய தலைமுறைக்கு இது ஒரு வரப்பிரசாதம். இயற்கையை நேசிக்கும்
எவனும் இந்த தலைமகனின் துணிச்சலை வியந்து நிற்பான்.

துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்தில் சொல்லித தெரிந்ததை காதோடு
வந்ததை காற்றிலே கலக்க விடாமல் கருத்திலே எடுத்ததன் பிரதி
பலிப்புத்தான் இந்த வரலாறு.

ஒருவன் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கலாம் என்றால் நான் ஏன் இந்த 34
மைல் கொண்ட பாக்கு நீரிணையைக் கடக்க முடியாது.

மனோ தைரியம் உ்ள மனிதரால் மட்டும் தான் இதைக் கற்பனை கூட
செய்து பார்க்க முடியும்

திரை கடலைக் கடந்து நீந்தியமையால் மக்களின் அன்புக் கடலில் நீந்துகின்றார். இன்று.
தவறில்லையே புகழின் உச்சிக்கே சென்றவர் அல்லவா?

மலைபோன்ற அலை தோன்றும் மகா சமுத்திரத்தை எம் தமிழ்ப் புதல்வன்
மடேனா தைரியத்தடன் பிளந்து சென்று இங்குள்ள தமிழர் இதுவும் செய்வர்

என்ற சேதியை தமிழகத்தில் சொல்லியது நிலவில் சொல்லியதற்
கொப்பல்லவா.∴

சாதாரண அலை கடலா. சமுத்திரமல்லவா. மலை போலெழுந்து வரும் அலையை மனோ பலத்துடன் தன்னிரு கைளாலும் கிழிக்க வேண்டுமே. அதுவும் சாதாரண தூராமா? 34 மைல் கடல் தூரமல்லவா, அதனைக் கடப்பதற்குள் திமிங்கலம், வேளாச்சுறா திருக்கை என பல ஜெந்துக்களின் தீங்கினையுமு கடக்க வேண்டுமே. சுழி நீரோட்டம் என்பவற்றையும் தாண்ட வேண்டுமே. தனி மனிதனின் இந்த மனோ தைரியத்தை எதற்குத்தான் ஒப்பிடுவது. பாதை மட்டும் தான் இருக்கிறது. பயணத்தில் இருப்பதை எனிமேல் தான் தெரிந்தாக முடியும்.

வல்வை மண் பெருமிதம் கொண்டது. வீரப் புதல்வனின் சாதனையை உலகறியச் செய்திட உவகை கொண்டெழுந்தது. காற்றிலே விழுந்த செதிகணப் பொழுதில் கசியத் தொடங்கியது. கூடிய வெள்ளம் கரை புரண்டது.

27 வருடமாக பாக்கு ஜலசந்தியை நீந்திக் கடக்க வேண்டும் என்று தனக்குள் இருந்த அவாவிற்கு வெற்றித் திருநாளும் வந்தது.

1954 மார்ச் 16ம் திகதி ஒரு மறக்க முடியாத நாள்… அந்நாளில் வெளிநாட்டு விவகார அமைசின் பாராளுமன்ற காரியதரிசி திரு.வி. நல்லையா அவர்கள் வழியனுப்பி நீச்சல் வீரன் திரு.நவரத்தின சாமி பாக்கு தொடுவாயை நீந்திக் கடக்கும் முயற்சியைத் தொடுத்தானர் தோள் வலி காட்டி தண்ணீரைக் கிழித்து நீந்தினார.

வருணபகவானும் வாயு பகவானும் அலை மகளோடு காண ஆவல் கொண்டனர் நடப்பதைப் பார்த்தனர் நண்ணினார் 24 மணித்தியாலம் நீந்திக் ஆர்ப்பரித்தது இயற்கை சீற்றம் கொண்டது அழைப்பின்றி வந்தவர்களுக்கு அட்டகாசம் அதிகரித்தது. வானுயர எழுந்த அலை நீரொட்டத்தல் தள்ளியது வீரக் காவியம் படைக்க வந்தவனே. கிஞ்சித்தும் காராது வஞ்சித்தார்கள் இய்றகையால் வஞ்சிக்கப்பட்ட வீரன் நீண்ட தூரம் நீரோட்டத்தலி நீச்சலடிக்க நேர்ந்தது புற்பட்ட இடத்துக்கே திரும்பி வந்தார். இயற்கை என்னை வஞ்சித்துவிட்டது மீண்டும் முய்றசிப்பேன் என்றார். உறுதி கூறுவதற்குள் தந்தையின் வழி தனையருள் ஒருவ்ன தந்தையால் தள்ளாது பொன்ால் தான் முடிப்பேன் என தனக்குள் முறுகினான்.

மண்ணில் காலடி எடுத்த ஒன்பதே நாளில் மீண்டும் துணிவு கொண்டெழுந்தார் நமது கலியுகம் மாருதி 1954 மார்ச் 25ம் நாள் பிற்பகல் 4 மணியளவில் 2500ற்கு மேற்பட்ட மக்கள் கூடிநிற்க மக்கள் பிரதி நிதி திரு.டி.ராலிங்கம் அவர்களும், அசிஸ்.கெமிசனர் திரு.பார்.குமாரகுலசிங்கம் அவர்களும் வலியனுப்ப 2வது தடவையாக ஜல சந்தியை கடக்கும் தன் இலட்சிய நோக்கோட காலடி எடுத்து வைத்து கைகளால் நீரினை கிழித்து நீச்சலைத் தொடங்கினார்.

மாலை மறைந்தது இருள் கவ்வியது வானத்து நட்சத்திர ஒளி கடலில் கரைந்தது வழித்துணையாக வந்தவர்கள் வழிதொரியாது கலங்கியபோதும் நீச்சல் வீரன் நீரைக்கிழித்து நீந்திக் கொண்டிருந்தான்.

அவரது கைகளுக்கு இத்தனை வலிமையா! சோதிக்க இம்முறை கடற்பாம்பு கைகைள சுற்றிறயது. தூக்கியெறிந்தான். துவண்டு போகவில்லை இம்முறை. துணிந்து நில். தொடர்ந்து செல். தோல்வி கிடையாது தம்பி என்ற கவிஞனின் கவிக்கு கட்டியம் கூறி நின்றான். மனதுக்குள் துளிர்விட்ட வீரம் விரட்சமாக விஷ்வரூபம் எடுத்தது. எதுவந்தாலும் உடைத்தெறிவேன் என

ஆக்ரோசமாக அடித்து உதைத்தான் தண்ணீரை தன் இரு கால்களாலும் வழியனுப்பி வைத்த ஆதவனும் பாதி உலகை சுற்றி வந்து மீண்டும் நீச்சல் வீரனின் சாகம் காண விளைந்தான். விரைந்தோடி வந்து விடியலைத்தந்தான் 26ம் நாள் மாலை 7 மணியளவில் கோடிக்கரையை தொட்டபோது 4000க்கும் மேற்பட்ட மக்கள் குரல் வானில் தொட்டது. மங்கிய இருளிலும் மக்கள் வரவேற்க காத்துநின்றது அப்போது புரிந்தது. எல்லாத் தமிழ் நெஞ்சங்களும் இந்தச் சாதனையையை தம் இனத்திற்காக நினைத்தார்கள். இன, மத, மொழி வேறுபாடின்றி நம் நாட்டக்கு அது பெருமை தேடிக்கொடுக்கும் என மனதிற்குள் பூரிப்படைந்தான் அடக்கமான நவரத்தின சாமி.

தமிழன் என்றால் தனியே அவருக்கொரு குணமுண்டு அமிழ்தம் அவனது மொழியாகும். அன்பே அவனது வழியாகும் என கவிஞன் பாடியதையும் விஞ்சித் தமிழகத்தில் கிடைத்த வரவேற்பை கூறிட வார்த்தைகள் இல்லை. புகழாரம் பூமியின் மடியில் இருந்து புறப்பட்டது வானுயர.

சமுத்திர குமாரன் என்றார்கள்.
கலியுக மாருதி என்றார்கள்
கடல்கடந்த தமிழன் என்றார்கள்
இன்னும என்னென்னே கூறி வள்ளுவனை சபை நடுவே அழைத்து வந்து இவனுக்கா இந்தவரி "எண்ணிய எண்ணியாங்கு எய்துபர் எண்ணியார்கள் திண்ணியராகின்" என்றார்கள்.

பண்டைத்தழிழர் வீரத்தைக் கொண்டு வந்து வெற்றி நாயகன் முன் நிறுத்தினார்கள். யாரும் நினைத்திருக்க முடியாத நீச்சலை வியந்தார்கள்.

விழா நாயகனுக்கு வினாடி நேரம் கொடுத்திலர் தூங்குவதற்கு.

அத்தனை வரவேற்பு.

தமிழகம் தந்த பரிசெல்லாம் சுமந்த எம் சாதனை வீரன் சொந்த மண்ணைத் தொட்ட போது கேட்கவா வேண்டும்.

நானிலம் புகழும் நவரத்தின சாமியைக் காண நடையிழந்த கிழவர் முதல் படையெடுத்து வந்தார்கள்.

அவரை வரவேற்க சேர்.கந்தையா ழைவத்தியநாதன், திரு.வி.நல்லையா, விரு.வீ.குமாரசாமி, டாக்டர் என்.எம். பெரோரா, மாகாண தெிபர் திரு.பீ.ஏ.ஹட்சன் திரு.டீ.இராமலிங்கம் எனப் பல பிரமுகர்கள் வாழ்த்தொலி வழங்கிட வந்தார்கள். கடல் கடந்த தமிழன் காண்போருக்கு அடக்கத்துடன் நின்றான். 27 வருடங்களுக்கு முன் துளிர்விட்ட அந்த பசுமையான நினைவுகளை ஒரு முறை நினைத்துப் பார்த்தான்.

அலைகடல் தாண்டியவருக்கு அலை அலையாக பருத்தித்துறை, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கரவெட்டி என வரவேற்புக்கள் வளர்ந்து கொண்டே சென்றது. சமுத்திர குமாரனைக் காண சமுத்திரம் போல் மக்கள் வெள்ளம் கூடியது.

பத்திரிகைகள் முதல் பக்கச் செய்தியாக முக்கியத்துவம் கொடுத்தன. இமயம் தாண்டிய தென்சிங்குடன் நம் நவரத்தினசாமியை ஒப்பிட்டார்கள். 5000ஆண்டுகளுககு முன் வாழ்ந்த தமிழனுடன் அவனது வீரத்துடன் சாதனையை ஒப்பிட்டார்கள்.

தமிழ் நெங்சங்கள் தங்களுக்குள்ளே இருந்த பாச உணர்வை அந்நாட்களில் பாராட்ட வந்த சிங்கள சகோதரர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

ஐந்து தசாப்தங்களுககு முன் நாம் வாழ்ந்த வாழ்வு சகோதர உணர்வு தமிழனது தனியான குணத்திற்கு அன்று கட்டியம் கூறி நினறு இத்தகைய சிறப்பிற்கும் மதிப்பிற்குமுடைய திரு நவரத்தினசாமியுடைய வாழ்க்கை மிகவும் எளிமையானது.

1909ம் ஆண்டு ஆவணித் திங்கள் 16ந் திகதி பூமியில் புத்திரனாய் பிரவேசச் சீட்டெடுத்தார் தொண்டமனாறு சைவப் பெரியார் உயர் திரு முருகுப்பிள்ளையிடத்திலே, தந்தையின் அரவணைப்பிலே வளர்ந்த கல்லூரியில் கல்வி பயிலும் நாளில் நெஞ்சினில் உருவான எண்ணக்கருவுக்கு வாழ்நாள் முழுவதும் உயிர் கொடுத்தார்.

அதனால் ஈழத் திருநாட்டில் நற் பெயருக்காக வீரச் சாதனை புரிந்த ஒரு வீர புருஷர் உண்டானால் அவர் யாழ்ப்பாணத் தமிழ் மகன் நவரத்தினசாமியே ஆகும். இவர் ஈட்டிய சாதனை காட்டிய வீரம் நாட்டிய நற்பெயர்

இலங்கையில் முன்னெப்போதும் கேட்டிராத அரிய செயலாக இப்போதும் பதிவேடுகளில் அழியா இடம் பெற்றிருப்பதே அதற்குச் சான்றாகும்.

தொடங்குவார் சிலர் அதை முடிப்பதில்லை. படிப்பவர் எவருமே பட்டம் பெறுவதில்லை. ஆம், கல்லூரி நாளில் ஆங்கிலக் கால்வாயை ஒருவன் நீந்திக் கடக்கலாம் என்றால் நான் ஏன் என் கண்முன்னே காணும் இந்த பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க கூடாது என்று கற்பனையில் போட்ட வயது பதினேழு. கல்லூரி வாழ்வு முடிந்ததும் வயது பத்தொன்பதில் அரசாங்க கிருஷிக இலாகாவில் பணியாற்ற தன்னை அமர்த்திக் கொண்ட போதிலும் தன் எண்ணக் கருவில் வளர்ந்து வரும் அந்த கடலைக் கடக்கும் விடயத்தை மட்டும் விட்டாரில்லை. அனுதினம் பயிற்சியில் ஈடுபடும் அதே வேளை தான் கடமையாற்றும் இலாகாவிற்கு இவரது கண்டுபிடிப்புகளால் இன்றும் பாவனையில் உள்ள பல சாதனங்களை வடிவமைக்க வழி கோலினார்.

கடமையில் கண்ணாயிருக்க அவரது ஆசைக்கும் அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாரோ அதைவிட முக்கியத்துவம் கொடுத்தார் தன் குடும்பத்திற்கு. தன் மூன்று புத்திரர்களையும் மனைவியையும் அளவுக்கதிகமாக நேசித்தமை அவர் தன் மனைவியின் இழப்பின் போது மரணச்சடங்கில் தன் கைகளைக்கிழித்து புறப்பட்ட குருதியில் மறுமணம் புரியேன் என சத்தியமும் செய்த கொண்டார்.

தன் லட்சியம், தன் கடமை, அவரது குடும்பம் என்ற மட்டும் நின்று விடவில்லை. காணும் நண்பரிடம் புன்முறுவல் பூத்த முகத்துடன் பழகிய நாட்களுக்கு இன்றும் அவரைப் பற்றிய பல கதைகளை அவர் வாழ்ந்த வல்வெட்டித்துறைக்குச் செனறு வந்தால் புரிந்து கொள்ளலாம்.

அத மட்டுமா? நாடக நடிப்ப, கவி புனைதல் என்பவற்றிலும் தலை சிறந்து விளங்கினார். கணிதத் துறையில் காட்டிய சாதனை இலங்கை வானொலி முன் நிற்க வைத்தது.

இலங்கை அரசாங்கம் இவரைக் கௌரவிக்கும் முகமாக பிரித்தானிய மகாராணியின் முன் நிற்க வைத்த கோமகனாலும் பாராட்டுப் பெற்று பல பதக்கங்களையும் தனதாக்கிக் கொண்டவர்.

இத்தகைய வீரரை பெற்ற ஈழ மாதா இன்னொரு சாதனை புரிய வைத்திட முன் எம்மிடமிருந்து எடுத்து விட்டாள். காவியம் படைத்திட புறப்பட்ட காவிய நாயகன் கடல் மீது கட்டு மரம் வலித்து தன் ஈழ நாட்டை கட்டு மரம் மூலமே வலம் வந்து வணங்கிட நினைத்த போது காணுமடா என் மைந்தா என் மீது நீ எனக்காக செய்யும் தீரச் செயல் போதுமென்று நினைத்தாளோ. சாதனை வேளை சோதனை கொடுத்த கடலுடன் அணைத்துக் கொண்டாள்.

கடலுள்ள வரை காவிய நாயகன் பெயர் இருக்கும். அதுதான் அவர் சம்பாதித்த அழியாப் புகழ் என்றும் அழியாத. அதற்காக எந்த மனிதனும் என்ன விலையும் கொடுக்கலாம்.